## அக்டோபர் - 3

**"உம்முடைய வேதத்தை (நியாயப்பிரமாணத்தை) நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறல் இல்லை."**

**- சங் 119 : 165.**

கிருபைக்காகவும், ஞானத்திற்காகவும், ஆவியின் கனிகளுக்காகவும், ஞான கர்த்தருக்கும், சகோதரருக்கும் ஊழியஞ்செய்ய சந்தர்ப்பங்களுக்காகவும் தேவனுடைய பிரிய குமாரனுக்கு ஒப்பான சாயலில் அதிகதிகமாக வளருவதற்காகவும் நம்முடைய விண்ணப்பங்கள் மிகுதியாக இருக்க வேண்டும். இந்த நிலைமைகளில் வாக்குதத்தம் பண்ணப்பட்டிருக்கிற "எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம்" இப்படிப்பட்ட இருதயங்களையும், சிந்தைகளையும் காத்துக் கொள்ளும்" என்பதை யார் சந்தேகிக்க கூடும். அநேகருடைய இருதயங்களை வருத்துகிற பெரிய தீமைகளில் ஒன்றை இந்த சமாதானமே அகற்றும். இவ்விதமாக நிரப்பட்ட இருதயத்தில் சுயநலமும் உலகப்பிரகாரமாக முன்னேறும் ஆசையும் சொற்ப இடத்தையே பெறும். நாம் இந்த பிரதிகூலமான நிலைமைகளால் சூழப்பட்டிருக்கும் சமயத்திலும் கூட, அதாவது அந்த எதிராளி தானே வஞ்சிக்கப்பட்ட பிரதிநிதிகளால் நம்மை சுற்றி நெருக்கி நிற்கிறபோதும் கூட, உலகத்தின் வியாகூலங்களையும், குழப்பங்களையும் இருதயத்துக்கு வெளியே வைத்துக் கொண்டிருக்கத்தக்கதாக தெய்வீக சமாதானம் நம்முடைய இருதயங்களில் வாசம் செய்து அவைகளில் ஆளுகைச் செய்யக் கூடும்.

**- Z ’04, 24 (R 3304)**

கடமை அன்பாலும் சுயநலமற்ற அன்பாலும் ஆக்கப்பட்டிருக்கிற தேவனுடைய நியாயப்பிரமாணம் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்குரியது. இவ்விதமாக அது தேவனுடைய வார்த்தையின் கட்டளைகளை அடக்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் அநேக வேதாகம வாக்கியங்கள் அதை ஒரு பரந்த அர்த்தத்தில் உபயோகிக்கின்றன. அதாவது தேவனுடைய வார்த்தையின் எல்லா போதனைகளையும், வாக்குதத்தங்களையும், புத்திமதிகளையும், தீர்க்க தரிசனங்களையும், சரித்திரங்களையும், அடையாளங்களையும் குறிக்கவும் உபயோகிக்கின்றன. அதாவது முழு வேதாகமம் கொண்டிருப்பவைகளை மிகுந்த பரந்த அர்த்தத்தில் கர்த்தரின் நியாயப்பிரமாணத்தின் மேல் பிரியமாயிருப்பது, அதன் தியானத்திலும், அதைப்பரப்புவதிலும், அப்பியாசிப்பதிலும், மிகுந்த சந்தோஷம் கொள்ளுவதைக் குறிக்கிறது. சகலமும் கர்த்தரின் மகிமைக்கென்று தங்களுடையவும், மானிட ஜாதியுடையவும், முடிவான நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று அறிந்து தேவனுடைய நியாயப்பிரமாணத்தை நேசிக்கிறவர்கள் இருதயத்திலும், மனதிலும், இளைபாறுதலடைகிறார்கள். சோதனைகளின் மத்தியில் இவர்கள் தேவதயவிலிருந்து விழுந்து போகாதபடி காக்கப்படுகிறார்கள். இவ்விதமாக கர்த்தருடைய வார்த்தை பராமரிப்பு, இவைகளின் உதவியால் இதைப் பத்திரப்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

**- P ’35, 131.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

சங் 4:8; 25:12,13; 29:11; நீதி 3:17,24; ஏசா 26:3,12; 28:12; 32:2; 54:10,13; 57:1,2,19; லூக் 2:14; யோபு 14:27; ரோம 5:1; 8:6; எபே 2:14-17; பிலி 4:7; கொலோ 3:15.

**கோபுர வாசிப்பு :** Z ’11, 397 (R 4898).

**வினாக்கள் :** இந்த வசனம் சம்பந்தமாக இந்த வார அனுபவம் என்ன? எந்த சந்தர்ப்பங்களில்? அதில் அனுகூலமாய் பிரதிகூலமாய் இருந்தவை எவை? அவை எவற்றில் முடிந்தன?